NOVEMBER/DECEMBER 2025

FTA61/CTA61 — தாள் : இலக்கியம் 6 - சங்க இலக்கியம் (புறம்)



Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தைப் பாடியவர் யார்?

2. அடுநெய் ஆவுதி - வரையறுக்க.

3. செம்புற்று ஈயல் எதற்கு உவமையாகச் சொல்லப்படுகின்றது?

4. மார்பில் பட்ட புண் முதுகில் வெளிப்பட்டமைக்காக நாணி வடக்கிரந்தவன் யார்?

5. மாஅயோயே எனத் தொடங்கும் பரிபாடலைப் பாடியவர் யார்?

6. பிணிமுகம் - குறிப்பு வரைக.

7. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் யார்?

8. பனிநீர்ப் படுவின் பட்டினம் எது?

9. உலகப் பொதுமறை எது?

10. எச்சத்தால் காணப்படுவது எது?



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) வெண்கை மகளிர் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பகைவர் நாட்டு வளத்தை அழிக்கும் தன்மையைப் பதிற்றுப்பத்தின் வழி நின்று விளக்குக.

12. (அ) தடிமரம் தடிதல் ஓம்பு - இடஞ்சுட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் சிறப்பை விளக்குக.

13. (அ) திருமாலிடமிருந்து விரிந்த பொருட்கள் யாவை?

(அல்லது)

(ஆ) பரிபாடல் குறிப்பு வரைக.

14. (அ) கடையேழு வள்ளல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) யாழின் தன்மையைச் சிறுபாணாற்றுப்படை வழி நின்று விளக்குக.

15. (அ) நடுவு நிலைமை அதிகாரத்தின் சிறப்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தெரிந்து வினையாடல் பற்றி விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்

16. பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்து தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. நல்லிசை நால்வர் யார்? நும் பாடப்பகுதி வழி நின்று விவரிக்க.

18. செவ்வேள் குறித்து பரிபாடல் தரும் செய்திகளை விரித்துரைக்க.

19. நல்லியக்கோடனின் விருந்தோம்பல் பண்பை விரித்துரைக்க.

20. பொருட்பாலின் சிறப்பை நும் பாடப்பகுதி வழி நின்று விளக்குக.
